




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்








| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Vol: 02 | Issue: 351 | 4 Pages | 17.7.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
| மலர்: 02 | இதழ்: 351 | 4 பக்கங்கள் | 17.7.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டியற் பால பல**

விளக்கம்: துன்பமில்லாத நிலைமை வேண்டுமானால்எல்லாப்பொருள்களும் உள்ள காலத்திலேயெ துறக்க வேண்டும்,துறந்த பின் இங்குப் பெறக்கூடும் இன்பங்கள் பல.

## காசா: நிவாரண பொருள் விநியோகத்தின்போது சோகம்; கூட்ட நெரிசலில் சிக்கி 19 பேர் பலி



டெல் அவிவ், ஜூலை 17

இஸ்ரேல் மீது கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ந்தேதி ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கணக்கானோர் பணய கைதிகளாக சிறை பிடித்து செல்லப்பட்டனர். எனினும், போர்நிறுத்த ஒப்பந்தம் வழியாக சிலரை மீட்டது. இன்னும் 50 பேர் வரை விடுவிக்கப்படாமல் உள்ளனர்.

ஆனால் அவர்களில் பாதிபேர் பலியாகி இருக்க கூடும் என அஞ்சப்படுகிறது. இந்த சூழலில், காசாவுக்கு எதிராக இஸ்ரேல் போரில் இறங்கியது. ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காசா பகுதியில் 58 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்நிலையில், காசா முனை பகுதியில் இஸ்ரேல் ஆதரவு பெற்ற அமெரிக்க தொண்டு நிறுவனம் ஒன்று மக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கும் பணியில் ஈடுபட்டு இருந்தது. அப்போது, கூட்ட நெரிசல் ஏற்பட்டதில், 19 பேர் அதில் சிக்கி உயிரிழந்தனர். இந்த நெரிசலின்போது ஏற்பட்ட வன்முறையில் ஒருவரையொருவர் தாக்கி கொண்டனர்.

இதில், கத்தியால் குத்தப்பட்டதில் ஒருவர் பலியானார். இதனால், மொத்தம் 20 பேர் பலியாகி உள்ளனர். இதுபற்றி அந்த அமெரிக்க தொண்டு நிறுவனம் கூறும்போது, ஹமாஸ் அமைப்பு தவறான தகவல்களை பரப்பி, மக்களிடையே அச்சமூட்டி வருகிறது. இதில் வன்முறை ஏற்பட்டு உள்ளது என அந்த அமைப்பு தெரிவிக்கின்றது.

எனினும், இதற்கான சான்றுகள் எதனையும் அந்த அமைப்பு வெளியிடவில்லை. காசாவில், 20 லட்சத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் மிக நெருக்கடியான சூழலில் வசித்து வருகின்றனர். உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள்கிடைக்காமல்தவித்து வருகின்றனர். இந்த சூழலில், நிவாரண பொருட்களை வாங்க செல்லும்போது கூட, தாக்குதலுக்கு இலக்காகும் சோக நிலை காணப்படுகிறது.

## ரூ.2.4 கோடிக்கு ஆன்லைன் ஷாப்பிங் செய்த 66 வயது மூதாட்டி



பீஜிங், ஜூலை 17

இன்றைய இளையதலைமுறையினர், கடைக்கு சென்று பொருட்களை வாங்குவதைவிட ஆன்லைனில் விதவிதமான பொருட்களை வாங்குவதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள். இளம் பெண்கள், சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் அதற்கு விதிவிலக்கல்ல என்பதை காட்டியிருக்கிறது ஒரு சீன மூதாட்டியின் ஆன்லைன் ஷாப்பிங் பட்டியல்.

சீனாவின் ஜியாடிங் பகுதியை சேர்ந்த வாங் என்ற 66 வயது பெண்மணி, தனியாக வசித்து வருகிறார். அவர் ஆன்லைனில் ஷாப்பிங் செய்து தனது பொழுதை கழிப்பதை வாடிக்கையாக வைத்துள்ளார். அவர் ஒரே ஆண்டில் ரூ.2.4 கோடிக்கு ஆன்லைன் மூலமாக பொருட்களை வாங்கிக் குவித்து உள்ளது அனைவரையும் வியக்க வைத்து உள்ளது. வீட்டில் எங்கு பார்த்தாலும் ஆன்லைனில் வாங்கப்பட்ட பொட்டலங்கள் அடுக்கி வைக்கப்பட்டு உள்ளன.

ஏராளமான பொட்டலங்கள் பிரித்து பார்க்கப்படாமலே உள்ளது. அப்படி பிரிக்கப்படாத பொருட்களுக்களை வைப்பதற்காக மற்றொரு வீட்டையும் வாடகைக்கு எடுத்து, வாங்கிய பொருட்களை குவித்து வைத்திருக்கிறார். பொட்டலங்கள் அடைந்து வைத்திருப்பதால் தங்கள் வீடுகளில் பூச்சித் தொல்லைகள் அதிகரித்து இருப்பதாகவும், சில பொருட்களில் இருந்து கெட்ட வாசனை வீசுவதாகவும் புகார்கள் தெரிவித்து வருகிறார்கள் அண்டை வீட்டார். இருந்தபோதிலும் பாட்டி பொருட்களை வாங்கிக் குவிப்பதை நிறுத்தவில்லை. பாட்டி குறித்த தகவல்கள் சமூக வலைத்தளத்தில் பரவி வருகிறது.

## அமெரிக்காவில் கனமழை; மெட்ரோ ரயில் நிலையத்திற்குள் புகுந்த வெள்ளம்



வாஷிங்டன், ஜூலை 17

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் நியூயார்க்மற்றும்நியூஜெர்சி பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கனமழையால் பல நெடுஞ்சாலைகள் மற்று, சுரங்கப்பாதைகள் வெள்ளத்தில் மூழ்கின. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு இருப்பதால் அங்கு அவசர சிலை அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கனமழை காரணமாக நியூயார்க் நகரில்மெட்ரோரெயில்நிலையத்திற்குள்ளும்வெள்ளம்புகுந்துள்ளது. வெள்ளநீர்புகுந்தத்தால், பயணிகள் இருக்கையில் ஏறி நின்ற காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

# சிதம்பரம், மயிலாடுதுறையில் 11 கி.மீ. முதல்வர் ரோடுஷோ: மழையிலும் மக்களிடம் மனு வாங்கினார்

முதல்வர் மு.க.ஸ்டாலின் 2 நாள் பயணமாக நேற்று முன்தினம் இரவு சிதம்பரம் வந்தார். ரயில் நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர்நேற்றுகாலைதங்கியிருந்த ஓட்டலில் இருந்து அரசு விழாவில் பங்கேற்க முதல்வர் புறப்பட்டார். அப்போது சிதம்பரம் நகரில் சுமார் 7 கிமீ தூரத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ரோடுஷோ நடத்தினர்.

சாலையின் இருபுறமும் காத்திருந்த ஏராளமான பொதுமக்கள், தொண்டர்கள், மாணவர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இடையிடையே மனு கொடுக்க காத்திருந்தவர்களிடம் இருந்து வேனில் இருந்தபடியே மனுக்களையும் பெற்றுக் கொண்டார். சிதம்பரம் விழாவை முடித்துக்கொண்டு, சிதம்பரத்திலிருந்து மதியம் புறப்பட்டு மயிலாடுதுறைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்றார்.

மாவட்ட எல்லையான கொள்ளிடத்தில் மயிலாடுதுறை மாவட்ட திமுக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கொள்ளிடம் புறவழிச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலையை முதல்வர் திறந்து வைத்தார். அதன்பின் திருவெண்காடு கீழவீதியில் உள்ள இல்லத்திற்கு சென்று அங்கு சிறிது நேரம் ஓய்வெடுத்தார். மாலையில் அங்கிருந்து புறப்பட்ட முதல்வர், செம்பதனிப்பு பைபாஸ் சாலையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலையை திறந்து வைத்தார்.



அதன் பின்னர் கருவி, கீழையூர் வழியாக மயிலாடுதுறை சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், இரவு 7 மணியளவில் மணக்குடி அருகே பாலாஜி நகரிலிருந்து ரோடு ஷோவை தொடங்கினார். இருபுறமும் அலைக்கடல் என மக்கள் திரண்டு நிற்க அவர்கள் மத்தியில் உற்சாகமாக கையசைத்தப்படி நடந்து சென்றார். அண்ணா பகுத்தறிவு மன்றம் வரை 4 கி.மீ. தூரம் நடந்தே சென்று ''ரோடு ஷோ'' நடத்தினார். வழிநெடுக இருபுறமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டு நின்று முதல்வரை வரவேற்று உற்சாக கோஷம் எழுப்பினர்.

அப்போதுமழையும்பொருட்படுத்தாமல் பொதுமக்களிடம் இருந்து மனுக்களையும் முதல்வர் பெற்றுக்கொண்டார். இந்த ரோடு ஷோவின் போது குழந்தைகளை கண்டதும் அருகில் சென்ற முதல்வர் அவர்களை கொஞ்சி மகிழ்ந்தார். பின்னர் அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் அமைக்கப்பட்டிருந்த 9 அடி உயரம் உள்ள கலைஞரின் முழு உருவ சிலையை திறந்து வைத்து, 68 அடி உயரம் கொண்ட கம்பத்தில் திமுக கொடி ஏற்றினார். மயிலாடுதுறை சர்க்யூட் ஹவுஸில் இரவு முதல்வர் தங்கினார்.

## அருளாளர் அருணகிரிநாதர் குரு பூஜையை முன்னிட்டு ஆன்மீக எழுச்சி பெரு விழா, முருகன் பற்றிய கருத்தரங்கம் மற்றும் தர்ம ரட்சகன் ஜோதிட இதழ் வெளியீடு முப்பெரும் விழா

அருளாளர் அருணகிரிநாதர் குரு பூஜையை முன்னிட்டு ஆன்மீக எழுச்சி பெரு விழா , முருகன் பற்றிய கருத்தரங்கம் மற்றும் தர்ம ரட்சகன் ஜோதிட இதழ் வெளியீடு முப் பெரும் விழா ஈரோடு மாநகரில் பில்டர்ஸ் அசோசியேஷன் பில்டிங் அரங்கில் அகில பாரத ஓம் முருகா பக்தர்கள் சபா பொதுச்செயலாளர் டி.ஆர்.சதீஸ் தலைமையில் அகில பாரத ஓம் முருகா பக்தர்கள் சங்க தலைவர் மற்றும் தர்ம ரட்சகன் ஜோதிட இதழ் நிர்வாக ஆசிரியர் புவனை சித்தர் கல்கி ராஜசேகர் முன்னிலையில் இந்த முப்பெரும் விழா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஶ்ரீரங்கம் மக்கள் நலச் சங்க தலைவர் மற்றும் எழுத்தாளர் டாக்டர் எஸ். என்.மோகன் ராம் தொடங்கி வைக்க ஆன்மீக நெறியாளர் மற்றும் திருஞானசம்பந்தர் அறக் கட்டளை செயலாளர் டாக்டர் ஜெய்லானி தர்ம ரட்சகன் ஜோதிட இதழை வெளியிட்டார். அதனை கொல் லிமலை மஹா சித்தர் ஜெயராஜ் மஹா ராஜ் வால்மீகி சுவாமிகள் பெற்று கொண்டார்.



இந்த விழாவில் இந்து அதிரடிப்படை நிறுவனர் ஜி.எஸ். ராஜகுரு, கவிஞர் டி.சி.பி. லோகநாதன்,ஜோதிடர் மகேஷ் கண்ணா, ஜோதிடர் டி.பி.பிரகாஷ், தமிழ் நாடு மாநில ராயுடு நாய்க்கர் மகா ஜன பேரவை மாநில இளைஞர் அணி தலைவர் டாக்டர் ஜெயக ஷே், தர்ம ரட்ச ணை சபா மாநில தலைவர் சிவராமச் சந்தி ர சுவாமிகள், உள்ளிட்ட ஆன்மீக ஞானிகள், சித்தர்கள், ஜோதிடர்கள் மற்றும் பல் வேறு அமை ப்புகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். தர்ம ரட்சகன் ஜோதிட இதழ் வெளியீட்டாளர் மா.சுதா நன்றி கூறினார்.

## நட்பின் கதையுடன் கூடிய புதிய முடி உதிர்தல் எதிர்ப்பு பிரசாரத்தில் ஹிமாலயா வெல்னஸ் சாம்பியன்ஸ் பிரிங்கராஜா

நட்பில் வேரூன்றிய இந்த பிரசாரம், ஹிமாலயாவின் முடி உதிர்தலுக்கான இயற்கையான தீர்வின் வலிமையை எடுத்துக்காட்டுகிறது.

ஹிமாலயா வெல்னஸ் நிறுவனம் தனது ஹேர் ஃபால் ஷாம்புவிற்கான ஒரு புதிய ஒருங்கிணைந்த பிரசாரத்தை தொடங்கியுள்ளது. இது அன்றாட முடி பராமரிப்பு பிரச்சினைகளுக்கு இயற்கையின் சிறந்ததை வழங்கும் பிராண்டின் முக்கிய தத்துவத்தை வலுப்படுத்துகிறது. இது புதிய தொலைக்காட்சி விளம்பரத்திலும், அகில இந்திய டிஜிட்டல் வெளியீட்டிலும் முடி உதிர்தலை குறைப்பதற்காக “முடியின் ராஜா” என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற பிரிங்கராஜாவை முன்னிலைப்படுத்துகிறது.

இந்த பிரசாரம் நீண்டகால நுகர்வோர் கவலையை நிவர்த்தி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது. முடி உதிர்தலுக்கான இயற்கையான மற்றும் பயனுள்ள தீர்வை கண்டறிகிறது. “உங்களைவிழ விடமாட்டேன்” என்ற பிரசாரவரியின் கீழ் உருவாக்கப்பட்ட சமீபத்திய படைப்பு கருத்து, ஹிமாலயாவின் ஆன்டிஹேர் ஃபால் பிரிங்கராஜா ஷாம்புவுடன், அவர்களின் தலைமுடி பாதுகாப்பான மற்றும் நம்பகமான கைகளில் உள்ளது என்பதை பெண்களுக்கு உறுதியளிக்க நட்பின்பிரதிபலிப்பைபயன்படுத்துகிறது.




இயற்கையால் சூழப்பட்ட வெயில் நிறைந்த ஒரு மதிய வேளையில், இரண்டு இளம் தோழிகள் ஊஞ்சலாடுவதை படம் பிடித்துள்ளது. இது “உதிர்தல்” பயத்தையும் முடி உதிர்தல் பதட்டத்தையும் மிகவும் நுட்பமாக இணைக்கிறது. ஒரு பெண் ஊஞ்சலில் இருந்து விழும் பயத்தை வெளிப்படுத்தும்போது, மற்றொரு பெண் அவருக்கு அரவணைப்பு மற்றும் நம்பிக்கையுடன் உறுதியளிக்கிறார். இது ஹிமாலயாவின் ஆன்டி ஹேர் ஃபால் பிரிங்கராஜா ஷாம்பூவின் வாக்குறுதியை பிரதிபலிக்கிறது.

இந்த பிரசாரம் குறித்து ஹிமாலயா வெல்னஸ் நிறுவனத்தின் அழகு மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு சந்தைப்படுத்தல் இயக்குனர் ராகினி ஹரிஹரன் கூறுகையில், “இயற்கை சார்ந்த தீர்வுகளை ஆதரிக்கும் ஒரு பிராண்டாக, எங்கள் புதிய பிரிங்கராஜா பிரசாரம், கூந்தலுக்கு நம்பகமான, இயற்கையான தீர்வுகளை வழங்குவதில் நாங்கள் வைத்திருக்கும் சமத்துவத்தை அடிப்படையாக கொண்டது.

அதன் வலுப்படுத்தும் மற்றும் ஊட்டமளிக்கும் பண்புகளுக்கு பெயர் பெற்ற பிரிங்கராஜா, நவீன அழகு உரையாடல்களில் இயற்கையின் சிறந்ததை கொண்டுவருகிறது. இந்த பிரசாரம் முடி உதிர்தலை குறைப்பது மட்டுமல்ல; இது அவர்கள்தங்கள்தலைமுடியை பராமரிக்க ஹிமாலயாவின் ஆன்டி ஹேர் ஃபால் ஷாம்புவை நம்புவது போல, ஒருவருக்கொருவர் நம்பிக்கை கொண்ட தோழிகளுக்கு இடையிலான பிணைப்பைகொண்டாடுவது பற்றியதாகும்” என்றார்.






## சிலம்பம் போட்டியில் ஐந்தாயிரம் மதிப்பிலான தங்க நாணயத்தை வென்ற மாணவி

சென்னை மாவட்ட அளவிலான தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் சிலம்பம் அசோசியேசன் நடத்திய போட்டியில் முதல் தங்க பதக்கம் பரிசாக ஐந்தாயிரம் மதிப்புள்ள தங்க நாணயத்தை வென்ற மாணவி. மெட்ராஸ் சிலம்ப கலை சங்கம் சார்பில் வாழ்த்துக்கள் தெரிவி க்கப்பட்டது.



# கட்டுமான பணி முடிந்து 3 வருடமாச்சு... மேலமாத்தூர் ஊராட்சி அலுவலகம் திறக்கப்படுமா?.. கிராம மக்கள் எதிர்பார்ப்பு



சோழவந்தான், ஜூலை 17

சோழவந்தான் அருகே ஊராட்சி அலுவலக கட்டுமான பணி முடிந்து மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் திறக்கப்படாததால் பொதுமக்கள் அவதியுற்று வருகின்றனர். சோழவந்தான் கோச்சடைசாலையில் உள்ளது மேலமாத்தூர் ஊராட்சி. இந்த ஊராட்சிக்குட்பட்ட மேலமாத்தூர், காமாட்சிபுரம், நாடார் தெரு, புல்லூத்து ஆகிய கிராம பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இக்கிராமங்களுக்குரிய ஊராட்சி அலுவலக கட்டிடம் காமாட்சிபுரத்தில் செயல்பட்டு வந்தது. இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்ததால் புதிய கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்து திருப்பரங்குன்றம் ஒன்றிய அலுவலகத்தின் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் 202022ன் படி ரூ.22.65 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. காமாட்சிபுரம் கண்மாய் கரை பகுதியில் இக்கட்டிட பணி துவங்கி 3 ஆண்டுகளுக்கு முன்பே முடிவடைந்தது.

இருப்பினும் இன்னும் திறக்கப்படாததால் பொதுமக்கள் அவதியுற்று வருகின்றனர். இது குறித்து பொதுமக்கள் கூறுகையில், 'ரூ.22.65 லட்சம் அரசு நிதியில் கட்டப்பட்ட புதிய கட்டிடம் 3 ஆண்டுகளாகியும் திறக்கப்படாமல் கிடக்கிறது. பழைய ஊராட்சி கட்டிடம் பழுதடைந்து படுமோசமாக இருப்பதால் அங்கு அச்சத்துடன் சென்று வருகிறோம். பணிகள்முடிந்தும்புதிய கட்டிடம் திறக்கப்படாததால், தற்போது குடி மகன்களின் கூடாரமாக இது மாறி விட்டது. மேலும் திறக்கும் முன்பே இக்கட்டிடத்தில் பல இடங்களில் விரிசல் ஏற்பட்டுள்ளதால், இதன் தரம் கேள்விக்குறியாக உள்ளது. இக்கட்டிடத்தை விரைவில் திறக்க கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

# சிவகங்கை மாவட்டத்தில் குறைந்துவரும் கோடை விவசாயம்: மீட்பு நடவடிக்கைக்கு விவசாயிகள் கோரிக்கை



சிவகங்கை, ஜூலை 17

சிவகங்கை மாவட்டத்தில் கோடை(ராபி) விவசாயம் வெகுவாக குறைந்துவிட்ட நிலையில், ஒரு போகம் மட்டுமே சாகுபடி செய்யும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் ஒருகாலத்தில் பல லட்சம் ஹெக்டேரில் விவசாய பணிகள் நடைபெற்று வந்தன. ஆனால், தற்போது சுமார் 1 லட்சத்து 5 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் மட்டுமே விவசாயம் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் 90 சதவீத விவசாய நிலங்கள் கண்மாய் நீர் பாசனத்தையே நம்பியுள்ளன. கடந்த ஆண்டு 78 ஆயிரம் ஹெக்டேர்நிலத்தில் மட்டுமே விவசாயம் செய்யப்பட்டது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் வரைகாரி, ராபி (கோடை விவசாயம்) பருவம் எனப்படும் இரு போக சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் ராபி பருவ விவசாயம் என்பது படிப்படியாக வெகுவாக குறைந்து வருகிறது.

காரிப் பருவத்தில் விவசாயம் செய்யப்படும் நிலங்களில் பாதியளவு கோடை காலத்திலும் விவசாயம் செய்யப்பட்டு வந்தது. ஆனால், போதிய மழை இன்மை, பெரியாறு, வைகை பாசன பங்கீட்டு நீர் சரிவர கிடைக்காதது என பல்வேறு காரணங்களால் கோடை விவசாயம் செய்ய விவசாயிகள் தயங்கும் நிலை உருவானது. பெரியாறு, வைகை பாசன பகுதிகளில் உள்ள கண்மாய்களுக்கு மழை நீரோடு, பாசன நீரும் கிடைக்கும்பட்சத்தில் கண்மாய்கள் நிறைந்து ஒரு போக சாகுபடி முடிந்து, மீண்டும் கோடைகால விவசாயம் செய்ய வாய்ப்புள்ளது. ஆனால் சிவகங்கை மாவட்டத்திற்கு உரிய பங்கு நீர் வருவதில்லை. பெரும்பாலும் மழையை மட்டும் நம்பியே விவசாயம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கோடை விவசாயம் என்பது பெரும்பாலும் குறைந்து விட்டது.

கடந்த 15 ஆண்டுகளாக கோடை விவசாயம் என்பது காரி பருவ விவசாயத்தில் செய்யப்படுவதில் 10 சதவீதத்தை கூட எட்டாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த 10 சதவீமும் ஆழ்குழாய் மூலம் விவசாயம் செய்யப்பட்ட நிலங்களாகும். இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது: கோடைகாலத்தில்மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் முற்கட்ட பணிகளுக்கு செலவு செய்த பணம் தொடர்ந்து வீணானது. விவசாயம் பாதிப்பிற்குமழையளவுசரிவை மட்டும் காரணமாக கூற முடியாது. இன்னும் இம்மாவட்டத்தில் அதிக நீர் தேவையுள்ள பயிர்களே விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

இதற்கு மாற்று ஏற்பாடு செய்ய வேளாண்மை துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என்ன பயிர் செய்தாலும் விளையக்கூடிய செம்மண் பூமியே இம்மாவட்டத்தின் பெரும்பாலான விவசாய நிலங்கள் ஆகும். இதுபோன்ற நிலங்கள் இருந்தும் கோடை கால விவசாயம் என்பது குறைந்து வருகிறது. இது குறித்து வேளாண்துறை ஆய்வு செய்ய வேண்டும் என்றனர்.

# திருவண்ணாமலை அருகே பரபரப்பு நடுவழியில் எக்ஸ்பிரஸ் ரயிலை நிறுத்தி கேட்டை மூடிய லோகோ பைலட்: கேட் கீப்பர் அதிரடி சஸ்பெண்ட், பெரும் அசம்பாவிதம் தவிர்ப்பு



திருவண்ணாமலை, ஜூலை 17

திருவண்ணாமலை அருகே ரயில்வே கேட்டை மூடாததால், எக்ஸ்பிரஸ் ரயில் நடுவழியில் நிறுத்தப்பட்டது. எனவே, அலட்சியமாக செயல்பட்ட கேட் கீப்பர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். விழுப்புரம், திருவண்ணாமலை, காட்பாடி வழியாக நாகர்கோயில் காச்சிகுடா வாராந்திர எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயில் நேற்று முன்தினம் 13ம் தேதி நாகர்கோயிலில் இருந்து காச்சிகுடாவுக்கு சென்றுகொண்டிருந்தது.

இந்நிலையில், திருக்கோவிலூர் திருவண்ணாமலை இடையே தண்டரை கிராமத்திற்கு அருகே எக்ஸ்பிரஸ் ரயில் வந்த போது அங்கிருந்த ரயில்வே கேட் மூடப்படாததால் சிக்னல் விழவில்லை என கூறப்படுகிறது. அதனால், நடுவழியிலேயே எக்ஸ்பிரஸ் ரயிலை நிறுத்திவிட்டு, லோகாபைலட் கீழே இறங்கி வந்தார். பின்னர், ரயில்வே கேட் மூடாததை அறிந்து அதிர்ச்சியடைந்தார். கேட் கீப்பரின் அலட்சியத்தால் கேட் மூடாதது தெரியவந்தது.

பின்னர், லோகோ பைலட் ரயில்வே கேட்டை மூடிவிட்டு சென்றார். இதனால் சில நிமிடங்கள் தாமதமாக எக்ஸ்பிரஸ் ரயில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது. இதுதொடர்பாக, எக்ஸ்பிரஸ்ரயில்லோகோ பைலட் திருச்சி தெற்கு ரயில்வே கோட்ட உயர் அலுவலர்களுக்கு புகார் அளித்தார். அதன்பேரில், துறை சார்ந்த விசாரணை நடத்தப்பட்டது.

மேலும், ரயில்வே கேட்டை மூடாமல் அலட்சியமாக செயல்பட்ட கேட் கீப்பர் ராமு என்பவரை தெற்கு ரயில்வே நிர்வாகம் சஸ்பெண்ட் செய்து நேற்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளது. லோகோ பைலட் ரயிலை நிறுத்தி கேட்டை மூடாமல் இருந்திருந்தால் பெரும் அசம்பாவிதம் நடந்திருக்கும். ஏற்கனவே ரயில்வே கேட் கீப்பரின் அலட்சியத்தால், பள்ளி வேன் மீது ரயில் மோதி 3 மாணவர்கள் பலியான சம்பவம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

# 'சேதங்களை சரி செய்து தருகிறோம்' சென்னை மாநகராட்சியில் தவெக வாக்குறுதி மனு



சென்னை, ஜூலை 17

ஆர்ப்பாட்டத்தின் போது தொண்டர்கள் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததற்கு மாற்று ஏற்பாடு செய்து தருவதாக தவெக சார்பில் சென்னை மாநகராட்சியில் மனு அளிக்கப்பட்டுள்ளது. சேப்பாக்கம் சிவானந்தா சாலையில் தவெக தலைவர் விஜய் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் நடந்தது. 28 நிமிடங்கள் மட்டுமே நடந்த அதில் இரண்டே முக்கால் நிமிடமே விஜய் பேசினார்.

கூட்டத்தில் பல்வேறு மாவட்டங்களில்இருந்து தவெக இளைஞர்கள் மட்டுமே வந்திருந்தனர். அவர்கள், சாலை தடுப்புகளை உடைத்து சேதப்படுத்தினர். பூந்தொட்டிகளை உடைத்து நொறுக்கினர். சாலைகளையும் சேதப்படுத்தினர். மேலும் அந்த வழியாக சென்ற பொது மக்களையும் மறித்து வாகனங்களில் செல்ல விடாமல் தடுத்தனர். இதனால் பொதுமக்களுக்கும் தொண்டர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில், பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததாக சென்னை மாநகராட்சி சார்பில் போலீசில் புகார் கொடுத்தால், போலீசார் வழக்குப்பதிவு செய்வார்கள் என்ற கருத்து நிலவியது. இதுகுறித்து தகவல் வெளியானதும், சென்னை மாநகராட்சி அதிகாரிகளிடம் தவெக சார்பில் ஒரு மனு கொடுக்கப்பட்டது.

அந்த மனுவில், தவெக ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டது தெரிய வந்துள்ளது. அவற்றை நாங்களே சரி செய்து கொடுக்கிறோம். சேத விவரங்களை தெரிவித்தால்அதற்கானபணத்தை கட்டிவிடுகிறோம் என்று கூறியுள்ளனர். இதை மாநகராட்சி அதிகாரிகள் ஏற்றுக் கொண்டதாக கூறப்படுகிறது.

# தாராபுரம் வாடிக்கையாளர் சந்திப்பு முகாம் மற்றும் புதிய வாகன அறிமுக விழா



தாராபுரம் பகுதியில், அசோக் லேலண்ட் மற்றும் அம்மன் ஆட்டோ நிறுவனத்தின் சார்பாக வாடிக்கையாளர்சந்திப்பு முகாம் மற்றும் புதிய வாகன அறிமுக விழா இன்று சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் அம்மன் ஆட்டோ நிறுவனத்தின் முதன்மை நிர்வாக இயக்குனர் திரு சங்கர் (சிஇஓ) அவர்கள், அசோக்லேலண்ட்நிறுவனத்தின் டெரிடெரி மேனேஜர்திரு ஜெகதீஷ், சர்வீஸ் மேனேஜர் திரு முத்துகிருஷ்ணன், திருப்பூர் தெற்கு மேலாளர் திரு ஸ்டீபன், திருப்பூர் வடக்கு மேலாளர் திரு செந்தில்குமார், ASM திரு பெரோஸ் ஜீவானந்தம் கோகுலகிருஷ்ணன், மற்றும், திரு ஜான் அலெக்சாண்டர் மற்றும் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

இந்த நேரத்தில் நமது புதிய வாகனமான DOST PLUS XL G வாகனம் அறிமுகப்படுத்தப்பட்டது. வாடிக்கையாளர்களும் உற்சாகமாக கலந்து கொண்டுவிழாவை சிறப்பித்தனர்.

# கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை 8 வாரங்களில் அகற்ற உத்தரவு



சென்னை, ஜூலை 17

கூவம், அடையாறு நதிகள் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் ஓரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை 8 வாரங்களில் முழுமையாக அகற்ற சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அங்கு வசிக்கும் மக்களுக்கு உரிய மறுவாழ்வு அமைத்துக் கொடுக்கவும் அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பக்கிங்ஹாம் கால்வாய் கரையோர ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி கனகசுந்தரம் என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார்.

# பலாப்பழம் பறித்தபோது மின்சாரம் தாக்கி பெண் பலி



மூணாறு, ஜூலை 17

மூணாறு அருகே, பலாப்பழம் பறித்த பெண் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். கேரளா மாநிலம், மூணாறு அருகே உள்ள பள்ளிவாசல் ஊராட்சி கல்லார் பகுதியைச் சேர்ந்தவர் சன்னி. இவரது மனைவி பிந்து (48). இவர், நேற்று முன்தினம் வீடு அருகே உள்ள தோட்டத்தில் பலாப்பழம் பறிக்க சென்றார். அங்கு மரத்தில் இருந்த பலாப்பழத்தை, தான் கொண்டு சென்ற கம்பியால் தட்டி பறித்தபோது, அந்தகம்பி அந்த வழியாக சென்ற மின்கம்பியின் மீது உரசியது.

இதில், மின்சாரம் தாக்கி பிந்து தூக்கி வீசப்பட்டார். நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத மனைவியை தேடி சன்னி சென்றார்.

அங்கு மயங்கிக்கிடந்த பிந்துவைப் பார்த்து அவர் கூச்சலிட்டார். அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து பிந்துவை மீட்டு அடிமாலி அரசு தாலுகா மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். அதன்பின் அவரது பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# மின் இணைப்பு வசதி இல்லாததால் மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் படிக்கும் மாணவர்கள்



ராமநாதபுரம், ஜூலை 17

வாலிநோக்கம் அருகே குடிசைகளில் மின் இணைப்பு வசதி இல்லாததால் மாணவர்கள் மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் படிக்கின்றனர். ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியம், வாலிநோக்கம் பஞ்சாயத்து, சாத்தையா கோவில் குக்கிராமத்தில் மீனவர்கள், கூலி தொழிலாளர்கள் என 500க்கும் மேற்பட்டோர் சுமார் 100 வீடுகளில் வசித்து வருகின்றனர். இவர்கள் கடந்த 4 தலைமுறையாக அரசு நிலத்தில் குடிசை வீடுகளில் வசித்து வருவதாக கூறப்படுகிறது. இங்குள்ள குடியிருப்புகளில் மின் இணைப்பு வசதி இல்லை. இதனால் மாணவர்கள் இரவில் குடிசைகளில் மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் பாடங்களை படித்து வருகின்றனர்.

இது குறித்து கிராம மக்கள் கூறியதாவது: எங்களது குழந்தைகள் நல்ல முறையில் கல்வி கற்க வேண்டும். இதற்காக எங்களுக்கு வீட்டுமனை பட்டா, மின் இணைப்பு வழங்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதுகுறித்து கடலாடி வருவாய்த்துறையினர் கூறுகையில், 'வாலிநோக்கம் சாத்தையா கோவில் பகுதியில் குடிசைகளில் வசித்து வந்தவர்களுக்கு அருகே அரசு சார்பில் அனைத்து வசதிகளுடன் சுனாமி வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளது. இருப்பினும் அதே குடிசைகளில் வசித்து வருகின்றனர். பட்டா கேட்டு வருகின்றனர். இந்த பகுதி அரசு வருவாய்த்துறை கணக்கில் சாத்தார்கோவில் வட்ட கிணறு என தாக்கலாகி வருவதால் தனி நபர்களுக்கு பட்டா, மின் இணைப்பு வழங்குவதில் நிர்வாக சிக்கல் உள்ளது என்று தெரிவித்தனர்.

# புதுக்கோட்டை பொற்பனைக் கோட்டையில் நடந்த 2ம் கட்ட அகழாய்வு பணி நிறைவு: அகழாய்வு இயக்குநர் தகவல்



புதுக்கோட்டை, ஜூலை 17

புதுக்கோட்டை பொற்பனைக் கோட்டையில் நடந்த 2ம் கட்ட அகழாய்வு பணி நிறைவு பெற்றது என அகழாய்வு இயக்குநர் தங்கதுரை தெரிவித்துள்ளார். 203 நாள் நடந்த அகழாய்வில் 1,982 தொல்பொருட்கள் கிடைத்துள்ளன எனவும் அகழாய்வு இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# மூணாறு பகுதியில் தோட்ட தொழிலாளர்களை அச்சுறுத்தும் செந்நாய் கூட்டம்: வனத்துறை நடவடிக்கை எடுக்க கோரிக்கை



மூணாறு, ஜூலை 17

மூணாறு பகுதியில் தேயிலை தோட்டங்களில் திரியும் செந்நாய் கூட்டத்தால் தொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர். இது குறித்து வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் உள்ள மூணாறு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் காட்டு யானை, புலி, காட்டெருமை உள்ளிட்ட வனவிலங்குகள் அதிகளவில் உள்ளன. இவைகள் அவ்வப்போது குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து தொழிலாளர்களை அச்சுறுத்தி வருகின்றன. இந்நிலையில், செந்நாய்களின் கூட்டமும் தேயிலை தோட்ட தொழிலாளர்களை அச்சுறுத்தி வருகின்றன.

தேயிலை தோட்டப் பகுதியில் கூட்டம், கூட்டமாக செந்நாய் கூட்டம் திரிவதை சிலர் பார்த்துள்ளனர். கடந்தாண்டு வட்டவடைப் பகுதியில் 50க்கும் மேற்பட்ட ஆடுகளை செந்நாய்க்கூட்டம் தாக்கிக் கொன்றது. இந்நிலையில், நேற்று முன்தினம் மூணாறு வனத்துறை ஆர்.ஆர்.டி துணை ரேஞ்ச் வனஅதிகாரி ஜெயன் ஜே, சைலன்ட் வேலி எஸ்டேட் பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்தில் திரிந்த செந்நாய் கூட்டத்தை வீடியோ எடுத்துள்ளார். இந்த காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதைப் பார்த்து மூணாறு பகுதியில் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர். இது குறித்து வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து வனத்துறை அதிகாரி ஜெயன் ஜே கூறுகையில், 'இந்திய செந்நாய், கிழக்கு ஆசிய செந்நாய், சீனசெந்நாய் அல்லது தெற்கு செந்நாய் என செந்நாய் நான்குவகையாக உள்ளன. தேயிலை தோட்டங்களில் திரியும் செந்நாய்க் கூட்டம், கிழக்காசியாவை பூர்வீகமாகக் கொண்டவையின் பரிந்துரைக்கப்பட்டதுணையினமாகும். இது அழிந்து வரும் இனத்தை சேர்ந்தவை. பூமியில் ஏற்படும் கால நிலைமாற்றத்தால்நீண்ட தூரம் பயணம் செய்து இங்கு வந்திருக்கலாம்' என்றார்.

# ஆம்பூர் நகராட்சி பகுதியில் இன்று தூய்மை பணியாளர் மீது தாக்குதல்; சக பணியாளர்கள் போராட்டம்: போலீஸ் நிலையத்தில் குவிந்ததால் பரபரப்பு

ஆம்பூர், ஜூலை17

ஆம்பூர் நகராட்சியில் இன்று தூய்மை பணியாளர்தாக்கப்பட்டதை கண்டித்து சக பணியாளர்கள் பணியை புறக்கணித்து போலீஸ் நிலையத்தில் குவிந்தனர். திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் நகராட்சியில் 36 வார்டுகளில் தூய்மை பணியாளர்கள் பணி மேற்கொண்டு வருகின்றனர். சில வார்டுகளில் தனியாரும், சில வார்டுகளில் நிரந்தர பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். ஆம்பூர் பஜார் நாகநாத சுவாமி கோயில் தெருவில் உள்ள மீன்கடை அருகே இன்று காலை தொழிலாளர்கள் சிலர் பணியில் ஈடுபட்டனர். அங்கு வைத்திருந்த குப்பை டப்பாக்களை பணியாளர் சம்பத், மற்றொரு பெண் பணியாளர் அகற்றியதாக தெரிகிறது. அப்போது அங்கிருந்த கடைக்காரர்கள் சிலர் அது எங்கள் கடை குப்பை டப்பா. அதை எதற்காக தூக்கிப்போடுகிறாய்' எனக்கூறியுள்ளார்.




இதனால் ஏற்பட்ட தகராறில் சம்பத்தை தாக்கியுள்ளனர். இதில் காயம் அடைந்த சம்பத், பணி மேற்பார்வையாளரிடம் தெரிவித்தார். இதையறிந்த சக பணியாளர்கள் சுமார்30 பேர், பணிகளை புறக்கணித்துவிட்டு ஆம்பூர் டவுன் போலீஸ் நிலையத்தில் குவிந்தனர். அங்கு சம்பத்தை தாக்கிய 4 பேரை கைது செய்யக்கோரி போலீசாரிடம் கூறினர். தொடர்ந்து போலீசார், சம்பத்தை தாக்கியவர்களை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். தூய்மை பணியாளர்கள் பணியை புறக்கணித்ததால் சில வார்டுகளில் குப்பைகள் அள்ளப்படாமல் இருந்தது. இந்த சம்பவம் காரணமாக இன்று காலை பரபரப்பு ஏற்பட்டது.

# பழனியில் மாலிப்டினம் எடுக்கும் திட்டம் இல்லை: எம்எல்ஏ தகவல்

திண்டுக்கல், ஜூலை 17

பழனியில் மாலிப்டினம் எடுக்கும் திட்டம் இல்லை என சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார். மேலும் "மக்கள் விரும்பாத, எதிர்க்கும் திட்டத்தை திமுக அரசு நிறைவேற்றாது. அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் வராததுபோல மாலிப்டினம் திட்டமும் வராது எனவும் பழனி எம்.எல். ஏ. செந்தில்குமார் தெரிவித்துள்ளார்



# தமிழர்களின் பாரம்பரிய ஆட்டக் கலைகளில் ஒன்றான ஜிக்காட்டம்: கலையை வளர்க்க அரசு உதவ வேண்டும் என கலைஞர்கள் கோரிக்கை

கோவை, ஜூலை 17

பொள்ளாச்சி பகுதியில் மறைந்து வரும் கிராமிய கலையை மீட்க வறுமையிலும் வீதியில் போராடிக்கொண்டு இருப்பதாக ஜிக்காட்ட கலைஞர்கள் தெரிவித்துள்ளார்கள். மொழி, இனம், ஆகியவற்றையும் தாண்டி வாழ்வியலோடு இரண்டற கலந்திருப்பது இசையும், நடனமும். காவடி ஆட்டம், மயிலாட்டம், கரகாட்டம் உள்ளிட்ட தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களில் ஜிக்காட்டமும் ஒன்று.

நஹாரி, உருட்டுக்குண்டா, ஜால்ரா, தப்பு, கோல், விசில் ஆகியவற்றை கொண்டு ஒரு சேர ஒளிக்கும்போது ஜிக்கு என்ற சத்தமும் அதற்கேற்ற நடன அசைவுகளும் கொண்ட ஜிக்காட்டம் பெரும்பாலும் கொங்குமண்டலத்தில் அதிகம் உள்ளது. பல வண்ண உடையில் கால் சலங்கையுடன் கால்களுக்கு இடையில் வாத்திய கருவியை இசைத்து, அதற்கேற்ப நடனமாடி மக்களை மகிழ்வித்து வருகின்றனர். பொள்ளாச்சி, நஞ்சைகவுண்டன் புதூர் சேர்ந்த ஜிக்காட்ட கலைஞர்கள். 15 பேர் கொண்ட ஜிக்காட்டதில் குழு தலைவர் விசில் மூலம் வழிநடத்த வாத்தியங்களின் இசைக்கேற்ப நடனக்கலைஞர்கள் நலினத்துடன் வடிவம் கொடுகின்றனர்.



ஜிக்கட்டத்தில் 4 வகை ஆட்டங்கள் உள்ளன. பொள்ளாச்சி பகுதியில் அதிகம் உள்ள இந்த கலைஞர்கள் பெரும்பாலானோர் வறுமையில் வாடுவதாக மகேந்திரன் தெரிவித்துள்ளார். கோயில் திருவிழாக்கள், பள்ளி, கல்லூரி நிகழ்ச்சிகள் என ஆண்டுக்கு 6 மாதங்கள் வரை வருமானம் கிடைப்பதாகவும் மீதமுள்ள நாட்களில் கூலி வேலைக்கு சென்று வாழ்க்கையை நடத்துவதாகவும் ஜிக்காட்டம் கலைஞர்கள் தெரிவித்துள்ளனர். ஜிக்காட்டம் கலைஞர்களை அங்கீகாரத்து கலையை மீட்க உதவ வேண்டும் என அவர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வண்டலூர் உயிரியல் பூங்காவில் அனகோண்டா 10 குட்டிகள் ஈன்றது: கண்ணாடி கூண்டில் பராமரிப்பு



கூடுவாஞ்சேரி, ஜூலை 17


வண்டலூர் உயிரியல் பூங்காவில் உள்ள மஞ்சள் நிற அனகோண்டா பாம்பு 10 குட்டிகளை ஈன்றுள்ளது. அவற்றை கண்ணாடி கூண்டில் வைத்து பராமரித்து வருகின்றனர். சென்னை வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சிங்கம், சிறுத்தை, புலி, கரடி, யானை, மான்கள்மற்றும் மனித குரங்கு உள்பட பல விலங்குகளும் ஏராளமான பறவைகளும் உள்ளன. இவைகளை கண்டு ரசிக்க தினமும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இந்த நிலையில், பூங்காவில் மஞ்சள் அனகோண்டா பாம்பு பராமரிக்கப்பட்டு வருகிறது.

தற்போது இந்த பாம்பு நேற்று காலை 10 குட்டிகளை ஈன்றுள்ளது. இந்த மஞ்சள் நிற அனகோண்டா கடந்தாண்டு 9 குட்டிகளை ஈன்றது. இங்குள்ள மற்றொருஅனகோண்டா பாம்பு 11 குட்டிகளை ஈன்றது. தற்போது மஞ்சள் நிற அனகோண்டா பாம்பு 10 குட்டிகளை ஈன்றுள்ளதால் அதன் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால்பூங்கா அதிகாரிகள், ஊழியர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அனகோண்டா குட்டிகளை தனியாக ஒரு கண்ணாடி கூண்டில் வைத்து பராமரித்து வருகின்றனர்.

# "ஒரு கார்பன் மாதிரி கூட கண்டறியாமல், நதியையே கண்டறிந்து உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது பாஜக அரசு" - சு.வெங்கடேசன்

சென்னை , ஜூலை 17

"ஒரு கார்பன் மாதிரி கூட கண்டறியாமல், நதியையே கண்டறிந்து உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது பாஜகஅரசு" என்று மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ராஜஸ்தானில் உள்ள பஹஜ் என்ற இடத்தில் ஐந்து மாதங்கள் மட்டுமே அகழாய்வு நடந்துள்ளது. பத்து குழிகள் மட்டுமே தோண்டியுள்ளனர். அதற்குள் சரஸ்வதி நதியை கண்டுபிடித்து விட்டனர். இதே முறையில் ஹரியானாவிலும் இமாச்சல பிரதேச த்திலும் ஆய்வுசெய்ய முடிவு செய்துள்ளார்கள். கீழடியில் 102 குழிதோண்டி, 88 கார்பன் மாதிரிகளையும், 5700 தொல்பொருட்களையும் கொண்டு அறிவியல் முறை பகுப்பாய்வு நடத்தி அறிக்கை சமர்பித்தால், ஆதாரம் போதவில்லை என்கிறார்கள். ஆனால் ஒரு கார்பன் மாதிரி கூட கண்டறியாமல்,நதியையே கண்டறிந்து உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது பாஜக அரசு."இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பகுதிநேர ஆசிரியர்கள் இன்றும் போராட்டம் கைது



சென்னை, ஜூலை 17

தமிழகம் முழுவதும் பணி செய்யகூடிய பகுதி நேர ஆசிரியர்கள் தொடர்ந்து ஒரு வாரகாலமாக நுங்கம்பாக்கதில் இருக்கக்கூடிய டிபிஐ பள்ளி கல்வி இயக்குனர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகிறார்கள். நேற்றைய தினமே இது போன்ற போராட்டம் நடத்தி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தமிழகம் முழுவதும் 12 ஆயிரம் பகுதி நேர ஆசிரியர்கள்பணிசெய்து வருகிறார்கள் அவர்களுக்கு பணி நிரந்திரம் ஊதிய உயர்வு செய்ய வேண்டும் என்பது தான் மிக முக்கிய கோரிக்கையாக தமிழக அரசை வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மாணவர்களின் நலனிற்காக பகுதி நேரமாக மட்டுமே பணிசெய்யவில்லை . நாள் முழுவதும் பணி செய்து வருகிறோம். கல்வி துறை வளர்ச்சிக்காக பணி செய்து வருகிறோம். எனவே பணி நிரந்தரம் செய்வதிற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டும். அமைச்சர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று வலியுறுத்திதான் இன்றும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள் முற்றுகை போராட்டத்திற்கு அனுமதி இல்லாததால் போராட்டத்திற்கு வரக்கூடிய ஆசிரியர்கள்கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

தற்போது வரை 200 கும்மேற்பட்டோர்கைது செய்யப்பட்டு வருகிறார்கள். தொடர்ந்து இன்னும் ஒரு 1 மணி நேரம் இதுபோன்று வரக்கூடிய ஆசிரியர்களுக்கு அனுமதி இல்லாத காரணத்தால் கைது செய்வதிற்கான நடவடிக்கையும் காவல்துறை எடுத்திருக்கிறார்கள். கைது செய்யகூடிய பகுதி நேர ஆசிரியர்களை மண்டபத்தில் தங்கவைத்து இன்று மாலை 5 மணி அளவில் விடுவிப்பதற்கானஏற்பாடுகள் இருக்கிறது தொடர்ந்து காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

# வாணியம்பாடி தனியார் பல் மருத்துவமனையில் தொற்றால் 8 பேர் இறந்த விவகாரத்தில் மருத்துவ குழு ஆய்வு

வாணியம்பாடி, ஜூலை 17

வாணியம்பாடி தனியார் பல் மருத்துவமனையில் தொற்றால் 8 பேர் இறந்த விவகாரத்தில் மருத்துவ குழு ஆய்வு நடத்தி வருகிறது. திருப்பத்துார் மாவட்டம், வாணியம்பாடியில் அறிவு பல் மருத்துவமனை இயங்கி வருகிறது. இங்கு, 2023ல் வாணியம்பாடி, நியூ டவுன்பகுதியைச்சேர்ந்த 10 பேர், பல் சிகிச்சைக்காக சென்றனர்.அவர்களுக்கு டாக்டர் அறிவரசன் சிகிச்சை அளித்தார். சிகிச்சை பெற்ற 10 பேரில் எட்டு பேர், ஆறு மாத இடைவெளியில் அடுத்தடுத்து உயிரிழந்தனர். இதில், இந்திராணியின் மகன் ஸ்ரீராம்குமார், 32, தன் தாய்க்கு முறையாக பல் சிகிச்சை அளிக்காததால் உயிரிழந்தார் எனக்கூறி, வாணியம்பாடி டவுன் போலீஸ், மாவட்ட மருத்துவ இணை இயக்குநர், மாவட்ட கலெக்டர் மற்றும் தமிழக முதல்வர் அலுவலகத்திற்கு புகார் மனு அளித்தார்.



இருந்த நிலையில், மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தனர். இதில், பல்சிகிச்சைக்காக, 'பெரியோஸ்டீயல் லிப்ட்' எனப்படும் கருவி பயன்படுத்தப்படுவது வழக்கம். இந்த மருத்துவமனையில், அசுத்தமான நிலையில் இருந்த அந்த கருவி பயன்படுத்தப்பட்டது தெரியவந்துள்ளது. அசுத்தமான கருவியில் இருந்த பாக்டீரியா, சிகிச்சையின்போது நரம்பு வழியாக மூளைக்கு சென்று, 10 பேரை தொற்றுக்குள்ளாக்கியது. அதில்,எட்டுபேர்,நியூரோமெலியோய்டோசிஸ்' நோய் பாதிப்பு ஏற்பட்டு 8 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த எட்டு பேரும், மூளையில் ஏற்பட்ட ஒரே மாதிரி பாக்டீரியா தொற்றான நியூரோமெலியோய்டோசிஸ் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இது வேலுார் சி.எம்.சி., மருத்துவமனை மற்றும் ஐ.சி.எம்.ஆர். என்.ஐ.இ., மற்றும் தமிழ்நாடு பொது சுகாதார இயக்குநரகம் உட்பட பல அமைப்புகளைச் சேர்ந்த மருத்துவர்கள் குழு நடத்திய விசாரணையில் உறுதி செய்யப்பட்ட நிலையில், சிகிச்சை அளித்த மருத்துவமனைக்கு சீல் வைக்கப்பட்டது. இந்த நிலையில், மூடப்பட்ட தனியார் பல் மருத்துவமனையில் மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குநர் தலைமையில் மருத்துவக் குழு ஆய்வு செய்து வருகிறது.

# ஒரு குடும்ப அட்டைக்கு பொருள் வழங்க 2 முதல் 3 நிமிடங்கள் மட்டுமே ஆகிறது: தாமதம் ஆவதாக வந்த செய்தியில் உண்மை இல்லை: கூட்டுறவுத்துறை தகவல்

சென்னை, ஜூலை 17

அத்தியாவசியப் பொருட்களை ஒரு குடும்ப அட்டைதாரருக்கு வழங்குவதற்கு தற்போது 2 முதல் 3 நிமிடங்களே மட்டுமே ஆவதால் தாமதம் ஆவதாக வந்த செய்தியில் உண்மை தன்மை இல்லை என்று கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது. இது குறித்து கூட்டுறவுத்துறை வெளியிட்ட அறிக்கை: கூட்டுறவு நியாயவிலைக்கடைகளில் பிஓஎஸ் கருவியுடன் எடை தராசினை இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 28,736 கூட்டுறவு நியாயவிலைக்கடைகளில் இணைப்பு ஏற்படுத்தப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

மின்னணு எடை தாரசுடன் விற்பனை முனைய கருவி இணைக்கப்பட்ட பிறகு தற்போது விற்பனை முனைய கருவியில் கைவிரல் ரேகையை பதிவு செய்த பின்னர் அத்தியாவசியப் பொருட்களை ஒரு குடும்ப அட்டைதாரருக்கு வழங்குவதற்கு தற்போது 2 முதல் 3 நிமிடங்களே மட்டுமே ஆகின்றன. தற்போது பகுதி நேர நியாயவிலைக்கடைகளில் உள்ள பழையவிற்பனை முனைய இயந்திரந்தில் கைவிரல் ரேகை சரிபார்க்கும் முறை எவ்வித சிக்கல்களும் இல்லாமல் செயல்பட்டு வருகிறது.



நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப்பொருட்கள் விநியோகத்தில் ஏற்பட்ட காலதாமதம் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளை தொடர்ந்து, எவ்வித சிக்கல்களும் இல்லாமல் அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு தேவையான தொழில்நுட்பமாற்றங்கள் மென்பொருள் நிறுவனம் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதற்கு தற்போது ஒருமுறைமட்டுமேகுடும்ப அட்டைதாரரின் கைவிரல் ரேகை பதிவு செய்யப்படுகிறது. மின்னணு எடை தராசில் 35 கிலோ அரிசியை ஒரு முறையிலேயே எடை போடுவதற்குரிய மாற்றங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்யும் முதன்மைச் சங்கங்கள், சுய எடுப்புசங்கங்கள் அதன் பணியாளர் ஒருவரை நகர்வு பணியினை கண்காணிக்கும் வரையில் கிடங்களில் பணியமர்த்தம் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லும் லாரியுடன் முதன்மைச் சங்க சுய எடுப்பு சங்கபணியாளர் ஒருவர் கண்டிப்பாக செல்ல வேண்டும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் சரியான எடையில் நகர்வு செய்யப்படுவதையும் லாரியில் நகர்வு பணியாளர்கள் செல்வதையும், நியாய விலைக்கடைகளில் எவ்வித எடைகுறைவுமின்றி சரியான எடையில் இறக்கப்படுகின்றன என்பதையும் கூட்டுறவு சார்பதிவாளர், துணைப்பதிவாளர் மற்றும் மண்டல இணைப்பதிவாளர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

மின்னணு எடை தாரசுடன் விற்பனை முனைய கருவி இணைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பாக பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 9ம் தேதி தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றதைத் தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டம் திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டது. அத்தியாவசியப் பொருட்களை ஒரு குடும்ப அட்டைதாரருக்கு வழங்குவதற்கு தற்போது 2 முதல் 3 நிமிடங்களே மட்டுமே ஆவதால் ஒரு நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ள செய்தியில் உண்மை தன்மை இல்லை. இவ்வாறு கூட்டுறவுத்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அருகே 11 மாத பெண் குழந்தையை பெற்றோரே கொலை செய்ததாக புகார்..!!

திருப்பத்தூர், ஜூலை 17

கந்திலி அருகே 11 மாத பெண் குழந்தையை பெற்றோர் கொலை செய்திருக்கலாம் என ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் புகார் தெரிவித்துள்ளார். திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அடுத்த மண்டலநாயக்கம் ஊராட்சி பத்ரிக்கானூர் பகுதியில் வசிப்பவர் ராஜ்குமார் – முத்துலட்சுமி தம்பதியினர். இவர்களுக்கு ஏற்கனவே அடுத்தடுத்து 3 பெண் குழந்தைகள் உள்ள நிலையில் ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என எண்ணி நான்காவது குழந்தை பெற்றுக் கொள்ள முடிவு செய்தனர். கஜல்நாயக்கன்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று மகப்பேறு சம்மந்தமான சிகிச்சை பெற்று வந்த நிலையில் மீண்டும் தம்பதியினருக்கு 4 ஆவதாக பெண் குழந்தை பிறந்துள்ளது. பிறந்து 11 கால இடைவெளியில் உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டு கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு 18ம் தேதி குழந்தை இறந்துள்ளது.



இதை தொடர்ந்து இறந்த குழந்தையின் பெற்றோர் கஜல்நாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கொடு த்த மருத்துவ சிகிச்சை கோளாறு காரணமாக தன்னுடைய குழந்தை இறந்துவிட்டதாக குற்றசாட்டு வாய்த்த நிலையில், கஜல்நாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் உஷாதேவி ஏற்கனவே இந்த தம்பதியினருக்கு 3 பெண் குழந்தைகள் இருந்ததால் 4 வது குழந்தையை கொன்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கந்திலி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். திருப்பத்தூர்வட்டாட்சியர்நவநீதம் தலைமையில் பிரேத பரிசோதனை நிபுணர் பாலா ஜி தலைமையிலான மருத்துவ குழு மற்றும் காவல்துறை சார்ந்த அதிகாரிகள் 11 மாத குழந்தையை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை செய்ய உள்ளனர். பிரேத பரிசோதனையில் மாதிரிகளை சேகரித்த தடய அறிவியல் ஆய்வு கூடத்திற்கு கொண்டு செல்ல உள்ளனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

17.7.2025

## சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை தடுக்க சாட்டிலைட் மூலம் கண்காணிப்பு: அதிகாரிகள் நடவடிக்கை

சென்னை, ஜூலை 17

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை தடுக்க சாட்டிலைன் மூலம் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள நீர்வளத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். சென்னை புறநகரில் மொத்தம் 54 ஏரிகள் உள்ளன. இவற்றில் நெமிலிச்சேரி, சேலையூர், ராஜகீழ்ப்பாக்கம், இரும்புலியூர், தாம்பரம் பெரிய ஏரி, கடத்தேரி, மாடம்பாக்கம், மேடவாக்கம், சோளிங்கநல்லூர் உள்ளிட்ட பெரிய ஏரிகளில் ஆக்கிரமிப்புகள் அதிகரித்து காணப்படுகிறது.



பல இடங்களில் குடிசைகள் அமைத்தும், சில இடங்களில், வீடுகளைக் கட்டி குடியேறியுள்ளனர். சென்னைக்கு நீர் ஆதாரமாக உள்ள புழல் ஏரியில் திருமுல்லைவாயில், சூரப்பட்டு, புதூர் பகுதிகளில் தனியார் ஆக்கிரமித்துள்ளனர். மாதவரம் ரெட்டேரியில் வினாயகபுரம், லட்சுமிபுரம், கொளத்தூர் பகுதிகளில் ஏரி இடம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ரெட்டேரியின் மற்றொரு பகுதியில் உள்ள எம்.ஜி. ஆர்.நகர், புழல், சைக்கிள் ஷாப் பகுதிகளிலும் ஏரி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதேபோல் கொரட்டூர், கொளத்தூர் ஏரிகளிலும் ஏரிகளை ஆக்கிரமித்து வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இதனால், ஏரியின் பரப்புளவு குறைந்து, தண்ணீர் தேக்கி வைக்கும் பகுதி ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வருகிறது. இந்த ஆக்கிரமிப்பு காரணமாக மழைநீர் தேங்குவதற்கு வாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டு வருகிறது. அடைபட்ட மழைநீர் கால்வாய்களையும் மீறி, ஏரிகளில் மழைநீர் தேங்கும் போது, ஆக்கிரமிப்பாளர்கள் ஏரிக்கரைகளை உடைத்து விடுகின்றனர். இப்படி வெளியேறும் மழைநீர், சுற்றுப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை வெள்ளக்காடாக மாற்றி வருகிறது. இப்பிரச்னைக்கு தீர்வாக, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள ஏரிகள், நீர்நிலைகள் செயற்கைக்கோள் மூலம் கண்காணித்து, விரைவான நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஆக்கிரமிப்பு இருக்கிறது. குறிப்பாக சென்னையின் புறநகர் பகுதிகளாக உள்ள செங்கல்பட்டு மாவட்டத்தின் கடைசி பகுதிகள், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்தின் எல்லை பகுதிகள் ஆக்கிரமிப்பில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நீர் நிலைகள், ஏரிகள், குளங்கள் அதிகமாக ஆக்கிரமிப்புக்கு ஆளாகின்றன. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பல நீர்நிலைகள் காணாமல் போய்விட்டன.

இருக்கும் நீர்நிலைகளை பாதுகாக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் நீர்நிலைகளை காக்க அரசு புதிய நடவடிக்கையில் இறங்கி உள்ளது. ஒன்றிய அரசு இணையதளம் ஒன்றிய நீர்வள ஆணையம், இந்திய வானிலை மையம் மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இணைந்து புதிதாக இணையதளம் ஒன்றை தொடங்கி உள்ளது. இந்த இணையதளம் மூலம் மாநிலத்தின் நீர் தேவை, கிராமங்களில் தண்ணீர் வரவுசெலவு, குடிநீர் பற்றாக்குறை நிலவரம், அணைகளுக்கு நீர்வரத்து முன்னறிவிப்பு, நிலத்தடி நீர் தகவல், ஆறுகளுக்கு இடையே நீர் பரிமாற்றம் போன்ற தகவல்களை பார்க்க முடியும்.

இதேபோல, செயற்கைக்கோள் அடிப்படையிலான நீர்நிலைகளின் தகவல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பதற்கு 'tnwip.tn.gov.in' என்ற இணையதள சேவை ரூ.2.55 கோடி ஒதுக்கி உருவாக்கி உள்ளது. இதன் மூலம் நீர்நிலைகளின் கொள்ளளவு இழப்பையும் கண்டறிய முடியும் என்று கூறப்படுகிறது. நீர்நிலைகளில் ஏற்படும் ஆக்கிரமிப்புகள் குறித்து, துறை சார்ந்த அதிகாரிகளுக்கு தகவல்களையும் அனுப்பி வைக்க முடியும். இந்த 2 இணைய தள சேவைகளையும் முதல்வர் ஸ்டாலின் கடந்த வாரம் தொடங்கி வைத்துள்ளார். செயற்கை நுண்ணறிவு மற்றும் செயற்கைக்கோள் வாயிலாக புதிய தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் நீரின் இருப்பு, தரம் ஆகியவற்றை அரசால் எளிதாக கண்காணிக்க முடியும். அத்துடன் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பையும் தடுக்கவும், மறுசீரமைப்பு செய்யவும் முடியும். நீர்நிலைகள் புனரமைப்பு மேலும் நீர்நிலைகளை புனரமைக்க முன்கூட்டியே திட்டமிட முடியும். ஏரிகளில் நீர் இருப்பு மற்றும் நீர்பிடிப்பு பரப்பளவு ஆண்டுதோறும் ஏற்படும் மாற்றங்களை கண்காணித்து, ஆதாரபூர்வ முடிவெடுக்க முடியும் என்பதால், இத்திட்டம் நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு வரப்பிரசாதமாக இருக்கும். மழை காலங்களில் அதிகாரிகளுக்கு தானாக எச்சரிக்கை அறிவிப்புகள் அனுப்பி விரைவான நடவடிக்கை எடுக்க முடியும் என்று நீர்வளத்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை காரணமாக புழல் ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு



சென்னை, ஜூலை 17

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை காரணமாக புழல் ஏரிக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. புழல் ஏரிக்கு நீர்வரத்து வினாடிக்கு 324 கன அடியில் இருந்து 568 கனஅடியாக அதிகரித்துள்ளது.

## சங்ககிரி அருகே நூற்பாலை வேன் தடுப்புச்சுவரில் மோதி விபத்து

சேலம், ஜூலை 17

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே நூற்பாலை வேன் சாலை நடுவே உள்ள தடுப்புச்சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. பச்சக்காடு என்ற இடத்தில் நடந்த விபத்தில் காயமடைந்த தொழிலாளர்கள் சங்ககிரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஏப்ரல் மாதம் முதல் டாஸ்மாக் பணியாளர்களுக்கு ரூ.2000 ஊதிய உயர்வு: மேலாளர்களுக்கு சுற்றறிக்கை

டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடைகளில் பணியாற்றும் 6,567 மேற்பார்வையாளர்கள், 14,636 விற்பனையாளர்கள் மற்றும் 2,426 உதவி விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியம் கடந்த ஏப்ரல் 1ம் தேதி முதல் ரூ.2 ஆயிரம் உயர்த்தி வழங்கப்படும் என்று ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் இந்த ஊதிய உயர்வை வழங்குவது தொடர்பாக டாஸ்மாக் நிர்வாகம் அனைத்து மூத்த மண்டல மேலாளர்கள் மற்றும் மாவட்ட மேலாளர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில், சட்டப் பேரவை அறிவிப்பின்படி டாஸ்மாக் பணியாளர்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் முதல் ரூ.2000 ஊதிய உயர்வு வழங்கப்படும். இதில் கடந்த ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கான ஊதிய உயர்வு தொகை 2 நாட்களில் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். இதைத்தவிர்த்து விதிகளை மீறி பாட்டிலுக்கு பத்து ரூபாய் கூடுதலாக வசூலித்த குற்றச்சாட்டில் சிக்கிய 451 கடை ஊழியர்களுக்கு ரூ.1000 மட்டும் ஊதிய உயர்வு வழங்கப்படும். இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இன்றைய ராசி பலன்கள் (17.7.2025)

**மேஷம்:** நன்மை தரும் நாள். உங்கள் முயற்சிகள் பயனளிக்கும். எதிர்பார்த்த செய்தி வரும். பரிகாரம்: துர்கை வழிபாடு நல்லது.

**ரிஷபம்:** குடும்பத்தில் சுமூகமான நிலை காணப்படும். சுப நிகழ்ச்சிகள் பற்றிய பேச்சு. பரிகாரம்: விநாயகர் வழிபாடு பயன் தரும்.

**மிதுனம்:** வேலைக்குள் விருப்பமான மாற்றம் ஏற்படும். பழைய நண்பர் உதவுவார். பரிகாரம்: நவகிரக வழிபாடு செய்யவும்.

**கடகம்:** பண வரவு கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி. உடல் நலம் மேம்படும். பரிகாரம்: சந்திரன் வழிபாடு சிறந்தது.

**சிம்மம்:** திறமையை நிரூபிக்கும் நாள். சிறிய பயண வாய்ப்பு. அதிகாரிகள் நன்மையாக பேசுவர். பரிகாரம்: சூரிய வழிபாடு செய்யவும்.

**கன்னி:** குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். யாருக்கும் கடன் கொடுக்க வேண்டாம். பரிகாரம்: விஷ்ணு ஸ்லோகங்கள் பாடுங்கள்.

**துலாம்:** தொழிலில் முன்னேற்றம். புதிய வாய்ப்பு வரும். வழக்குகளில் முன்னேற்றம். பரிகாரம்: துர்க்கை அம்மன் வழிபாடு நல்லது

**விருச்சிகம்:** வெளிவட்டாரத்தில் நன்மை. பழைய உறவுகள் உறுதி பெறும். பண வரவு கூடும். பரிகாரம்: சனி பகவான் வழிபாடு.

**தனுசு:** உறவினர் உதவி பெறும் நாள். திட்டமிட்ட காரியம் நிறைவேறும். பரிகாரம்: தட்சிணாமூர்த்தி வழிபாடு.

**மகரம்:** பணியாளர்கள் மேன்மை பெறுவார்கள். அரசு உதவிகள் கிடைக்கும். பரிகாரம்: ஸனீஸ்வரருக்கு நிவேதனம் செய்யவும்.

**கும்பம்:** தாமதப்பட்ட பணம் கிடைக்கும். சொத்து தொடர்பான நன்மை. பரிகாரம்: சிவபெருமானுக்கு அபிஷேகம் சிறந்தது.

**மீனம்:** புதிய வேலை வாய்ப்பு. மன உற்சாகம் அதிகரிக்கும். நண்பர் உதவி பெறுவீர்கள். பரிகாரம்: குரு பகவான் வழிபாடு.

## பாலியல் தொல்லை கொடுத்து ரயிலில் இருந்து கர்ப்பிணியை தள்ளிய வாலிபருக்கு வாழ்நாள் சிறை: ரூ.1 கோடி இழப்பீடு வழங்க கோர்ட் உத்தரவு



திருப்பத்தூர், ஜூலை 17

ஆந்திர மாநிலம் சித்தூரைச் சேர்ந்த கர்ப்பிணி ஒருவர் திருப்பூரில் உள்ள பனியன் கம்பெனி ஒன்றில் டெய்லராக பணியாற்றினார். கடந்த பிப்ரவரி 7ம் தேதி சொந்த ஊர் செல்ல திருப்பூர்ரயில்நிலையத்தில் இருந்து, கோவை வழியாக திருப்பதி செல்லும் இன்டர்சிட்டி விரைவு ரயிலில் மகளிர் பெட்டியில் பயணம் செய்தார்.

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் அருகே அந்த கர்ப்பிணி பெண் கழிவறைக்கு சென்றபோது வாலிபர் பாலியல் தொல்லை கொடுத்து, ஓடும் ரயிலில் இருந்து கீழே தள்ளிவிட்டு தப்பினார். படுகாயம் அடைந்த அந்த பெண்ணுக்கு வேலூர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கபட்டது. எனினும் நான்கு மாத சிசு வயிற்றிலேயே இறந்தது. பின்னர் பழைய குற்றவாளிகளின் படங்களில் இருந்து அந்த பெண் அடையாளம் காட்டிய கே.வி.குப்பம் தாலுகாவை சேர்ந்த கீழ் ஆலத்தூர் சின்னநாகல், பூஞ்சோலையை சேர்ந்த ஹேமராஜ் (27) என்பவரை ரயில்வே போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கை திருப்பத்தூர் மாவட்ட நீதிமன்ற நீதிபதி மீனா குமாரி விசாரித்து ஹேமராஜுக்கு வாழ்நாள் முழுவதும் சிறையில் கழிக்க கூடிய வகையில் சாகும் வரை சிறைத்தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்தார். மேலும், குற்றவாளி சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டு தினமும் அரை மணி நேரம் மட்டுமே வெளியே அனுப்ப வேண்டும். மற்ற நேரம் அவர் சிறை அறையிலேயே இருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட அந்த பெண்ணிற்கு தெற்கு ரயில்வே ரூ.50 லட்சம், தமிழக அரசு ரூ.50 லட்சம் என்று ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்கவும், அதை ஒரு மாத காலத்திற்குள் திருப்பத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் நீதிபதி மீனாகுமாரி உத்தரவிட்டார். இந்த சம்பவம் பிப்ரவரி மாதம் நடந்தது. குற்றவாளியை கைது செய்து 50 நாட்களிலேயே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து 32 நாட்களில் விசாரணை முடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது இதுவே முதன்முறையாகும்.

## இன்று வெளியாகிறது "ஸ்ட்ரேஞ்சர் திங்ஸ்: சீசன் 5" டீசர்




ரசிகர்களால் மிகவும் விரும்பிப்பார்க்கப்படும் வெப் தொடர்களில் ஒன்று 'ஸ்ட்ரேஞ்சர் திங்ஸ்'. இதன் முதல் சீசன் கடந்த 2016ம் ஆண்டு நெட்பிளிக்ஸ் ஓ.டி.டி தளத்தில் வெளியானது.

இந்த தொடர் உலகளவில் பார்வையாளர்களின் இதயங்களை வென்றதைத்தொடர்ந்து, அடுத்தடுத்த சீசன்கள் வெளியாகின. இதுவரை 4 சீசன்கள் வெளியாகி உள்ளன. தற்போது டான் டிராட்சன்பெர்க் இயக்கத்தில் 5வது சீசன் உருவாகி வருகிறது. இது இந்த தொடரின் கடைசி சீசன் ஆகும்.

இந்நிலையில், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இதன் டீசர் இன்று வெளியாக உள்ளது. முதல் எபிசோட் வருகிற நவம்பர் 26ம் தேதியும், 2வது எபிசோட் டிசம்பர் 25ம் தேதியும், இறுதி எபிசோட் டிசம்பர் 31ம் தேதியும் வெளியாக உள்ளன.


## நடிகர் ரவி தேஜாவின் தந்தை காலமானார்



தொடர் இழப்புகளால் தெலுங்கு திரையுலகம் ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கியுள்ளது. கடந்த 13 அன்று, நீண்டகால உடல்நலக்குறைவால், மூத்த நடிகரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான கோட்டா சீனிவாச ராவ் காலமான சில நாட்களுக்குப் பிறகு, மற்றொரு சோகம் நிகழ்ந்துள்ளது.

நடிகர் ரவி தேஜாவின் தந்தை பூபதிராஜு ராஜகோபால் ராஜு(90), வயது முதிர்வு காரணமாக நேற்று இரவு காலமானார். ஐதராபாத்தில் உள்ள ரவி தேஜாவின் இல்லத்தில் அவர் இறந்தார். பிரபலங்கள் மற்றும் நலம் விரும்பிகள் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## வருங்கால கணவரை அறிமுகப்படுத்திய நடிகை தான்யா



தனது காதலருக்கு உதட்டில் முத்தம் கொடுக்கும் புகைப்படத்தை பகிர்ந்து அவர் யார் என்பதை நடிகை தான்யா பகிர்ந்து கொண்டுள்ளார்.

பழம்பெரும் நடிகர் மறைந்த ரவிச்சந்திரனின் பேத்தியான தான்யா, சசிகுமார் நடிப்பில் வெளியான 'பலே வெள்ளையத்தேவா' படத்தின் மூலமாக அறிமுகமானார். பின்னர், 'பிருந்தாவனம்', 'கருப்பன்', 'நெஞ்சுக்கு நீதி', 'மாயோன்', 'ரசவாதி' போன்ற படங்களில் நடித்த தான்யா, தெலுங்கு படங்களிலும் நடித்திருக்கிறார்.

இதுவரை குடும்பப்பாங்கான படங்களில் நடித்து வந்த தான்யா இன்ஸ்டாவில் அப்படியேகிளாமரில்கலக்கிவந்தார். இந்நிலையில், 'பென்ஸ்' படத்தின்ஒளிப்பதிவாளர் கவுதமுடன்நடிகைதான்யாவுக்குதிருமணநிச்சயதார்த்தம்நடந்துள்ளது. தனதுவருங்கால கணவருடன் லிப் லாக் முத்தம் கொடுத்தபடி புகைப்படம் வெளியிட்டு இதனை தெரிவித்திருக்கிறார்.

## இயக்குனராக அறிமுகமாகும் பிரபல பின்னணி பாடகர்?



பிரபல பின்னணி பாடகர் அரிஜித் சிங்கின் ரசிகர்களுக்கு ஒரு உற்சாகமான செய்தி வெளியாகி இருக்கிறது. நட்சத்திர பாடகரான அவர் விரைவில் இயக்குனராக அறிமுகமாக தயாராகி உள்ளார். ஒரு ஜங்கிள் அட்வென்ச்சர் திரில்லர் படத்தை இயக்க உள்ளதாக கூறப்படுகிறது.

படத்தின் ஸ்கிரிப்டை அரிஜித் சிங் மற்றும் அவரது மனைவி கோயல் எழுதியுள்ளதாகவும், மகாவீர் ஜெயின் தயாரிக்க உள்ளதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. விரைவில் நடிகர்களை தேர்வு செய்யும் பணி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இங்கிலாந்துக்கு அபராதம்: இந்தியாவுக்கு சாதகமாக ஐசிசி மைக்கெல் வாகன் குற்றச்சாட்டு



இந்தியா இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி கடந்த 10ந்தேதி லண்டன் லார்ட்சில் தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் இரு அணிகளும் ஒரே மாதிரி 387 ரன்கள் எடுத்தன. 2வது இன்னிங்சில் இங்கிலாந்து 192 ரன்னில் அடங்கியது. இதனால் இந்தியாவுக்கு 193 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பின்னர் இலக்கை நோக்கி 2வது இன்னிங்சை விளையாடிய இந்தியா 4வது நாள் முடிவில் 4 விக்கெட்டுக்கு 58 ரன்கள் எடுத்திருந்தது. கே.எல். ராகுல் 33 ரன்களுடன் அவுட் ஆகாமல் இருந்தார். இந்த நிலையில் மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் 5வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது.

தொடர்ந்து பேட்டிங் செய்த இந்திய அணி 2வது இன்னிங்சில் 74.5 ஓவர்களில் 170 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. இதனால் இங்கிலாந்து 22 ரன்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றியை ருசித்தது. ஜடேஜா 61 ரன்களுடன் (181 பந்து, 4 பவுண்டரி, ஒரு சிக்சர்) கடைசி வரை களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர், பென்ஸ்டோக்ஸ் தலா 3 விக்கெட்டுகளை சாய்த்தனர்.

இந்த நிலையில், இந்த போட்டியில் இங்கிலாந்து அணி வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பந்து வீச அதிக நேரம் எடுத்துக்கொண்ட காரணத்தால் போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் இங்கிலாந்து அணி வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலில் 2 புள்ளிகள் இங்கிலாந்து அணிக்கு குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பாக இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பா அவர் கூறியதாவது ,

நான் நேர்மையாக ஒரு விஷயத்தைக் கேட்க விரும்புகின்றேன். லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இரண்டு அணிகளுமேதான் ஓவர்களைக் குறைவாக வீசினார்கள். இந்த விஷயத்தில் இரண்டு அணிகளுமே தவறு செய்தது. ஆனால் ஒரு அணிக்கு மட்டும்தற்போது அபராதம் விதிக்கப்பட்டிருப்பது என்னால் நம்பவே முடியவில்லை.என தெரிவித்தார்.

## லார்ட்ஸ் டெஸ்ட்: இங்கிலாந்து அணி வீரர்களுக்கு அபராதம்...காரணம் என்ன



இந்தியா இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி கடந்த 10 ந்தேதி லண்டன் லார்ட்சில் தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் இரு அணிகளும் ஒரே மாதிரி 387 ரன்கள் எடுத்தன. 2வது இன்னிங்சில் இங்கிலாந்து 192 ரன்னில் அடங்கியது. இதனால் இந்தியாவுக்கு 193 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பின்னர் இலக்கை நோக்கி 2வது இன்னிங்சை விளையாடிய இந்தியா 4வது நாள் முடிவில் 4 விக்கெட்டுக்கு 58 ரன்கள் எடுத்திருந்தது. கே.எல். ராகுல் 33 ரன்களுடன் அவுட் ஆகாமல் இருந்தார். இந்த நிலையில் மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் 5வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது.

தொடர்ந்து பேட்டிங் செய்த இந்திய அணி 2வது இன்னிங்சில் 74.5 ஓவர்களில் 170 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. இதனால் இங்கிலாந்து 22 ரன்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றியை ருசித்தது. ஜடேஜா 61 ரன்களுடன் (181 பந்து, 4 பவுண்டரி, ஒரு சிக்சர்) கடைசி வரை களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர், பென் ஸ்டோக்ஸ் தலா 3 விக்கெட்டுகளை சாய்த்தனர்.

இந்த நிலையில், இந்த போட்டியில் இங்கிலாந்து அணி வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பந்து வீசஅதிக நேரம் எடுத்துக்கொண்ட காரணத்தால் போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் இங்கிலாந்து அணி வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலில் 2 புள்ளிகள் இங்கிலாந்து அணிக்கு குறைக்கப்பட்டுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.